வணிகவரித்துறை

| | |
|---|---|
| அனுப்புநர்<br>திரு. த. ஜேக்கப், இ.ஆ.ப<br>வணிகவரி ஆணையர்<br>சேப்பாக்கம்,<br>சென்னை- 5 | பெறுநர்<br>திருவா சன்ரைஸ் எடிபிள் ஆயில்ஸ்,<br>1 / 3, சத்தி ரோடு,<br>ஈரோடு–638 004. |

கடித எண். மகூவ / 52344 /2007 (VCC 1479), நாள் 25.01.2008

ஐயா,

பொருள்: மதிப்பு கூட்டு வரிச் சட்டம் 2006 – வரி விகிதம் குறித்த தெளிவுரை – கேட்டல் – தொடர்பாக.

பார்வை.. திருவா. சன்ரைஸ் எடிபிள் ஆயில்ஸ், கடித நாள்..25.9.2007.

––––

பார்வையில் கண்ட கடிதத்தின் மீது கீழ்க்கண்டவாறு விளக்கம் அளிக்கப்படுகிறது.

| | கேள்வி | பதில் |
|---|---|---|
| 1. | விவசாயி (Bought Note purchaseபடி) மற்றும் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் சூரியகாந்தி விதைகளை கொள்முதல் செய்து அதனை அறவை செய்து எண்ணை மற்றும் பிண்ணாக்கு வகைகளாக (Edible Oil, Oil Cake exempted in Fourth Schedule under TNVAT Act 2006 up to 500 Crores) விற்பனை செய்தால், சூரிய காந்தி விதைக்கு பிரிவு 12 தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி சட்டம் 2006–படி கொள்முதல் வரி செலுத்த வேண்டுமா ? | சூரியகாந்தி விதைகளை உள் மாநிலத்தில் விவசாயிகள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் இருந்து கொள்முதல் செய்து அறவை செய்தால் கொள்முதல் வரி 4% சதவிகிதம் செலுத்த வேண்டும். |
| 2. | விவசாயி மற்றும் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் சூரியகாந்தி விதைகளை கொள்முதல் செய்து அதனை வெளி மாநிலங்களில் ஒப்படைப்பு விற்பனை (Consignment sale basis) மூலம் விற்பனை செய்து அதற்கு பட்டியல் (Sale patti) மற்றும் ‘F’ பாரம் தாக்கல் செய்தால் சூரியகாந்தி விதைக்கு under Sec.12 TNVAT Act 2006படி கொள்முதல் வரி செலுத்த வேண்டுமா ? | மேற்கண்டவாறு உள்மாநிலத்தில் சூரியகாந்தி விதைகளை கொள்முதல் வரி செலுத்தி அவற்றை வெளி மாநிலத்திற்கு விற்பனை அல்லது சரக்கு மாற்றம் (Consignment sale basis) செய்தால் உரிய படிவம் ‘சி’ அல்லது ‘F’ படிவம் பெற்றால் உள்ளீட்டு வரவு வரியை நிபந்தகைக்குட்பட்டு வரவு வைத்துக் கொள்ளலாம். |

| | | |
|---|---|---|
| 3. | வெளி மாநிலங்களிலிருந்து எள்ளு (gingelly seed or Tilly seed) கொள்முதல் செய்ய உத்தேசித்துள்ளோம். எனவே, அதனை அறவை செய்து எண்ணை மற்றும் பிண்ணாக்காக விற்பனை செய்தால் எள்ளு வகைக்கு under Sec.12 TNVAT Act 2006படி கொள்முதல் வரி செலுத்த வேண்டுமா ? | கிடையாது.<br>வெளி மாநில கொள்முதலுக்கு கொள்முதல் வரி கிடையாது. |

ஒம்./– ஆர்.சந்திரகாந்தன்,
வணிக வரி ஆணையருக்காக.

நகல்..
செயலர்,
வணிக வரி மற்றும் பதிவுத் துறை,
சென்னை–600 009.

//ஆணைப்படி–அனுப்பப்படுகிறது//

துணை வணிக வரி அலுவலர் (ம.கூ.வ.)